DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No.07/2025**

Prosecution **PW.1**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | மாணிக்கமணி | கிராமம் : | |
| கணவர்பெயர் : | வேணுகோபால் | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 27 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.08.2025

எதிரி ஆஜர் . வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது மணப்பாறையில் குடியிருந்து இல்லத்தரசியாக உள்ளேன். இறந்து போன வேணுகோபால் எனது கணவர் ஆவார். கடந்த 13.12.2020 ம் தேதி இரவு 7.30 மணியளவில் காணியாளம்பட்டிக்கு சென்று காய்கறி வாங்கிக்கொண்டு இருசக்கர வாகனத்தில் மணப்பாறை–கரூர் சாலையில் ராஜலிங்கபுரம், ராஜலிங்கம் வீட்டிற்கு அருகில் வந்து கொண்டிருந்தபோது எனது கணவர் ஓட்டி வந்த இருசக்கர வாகனம் மீது எதிர் திசையில் TATA Ace வாகனம் மோதி விபத்தில் அடிப்பட்டு விட்டதாக ஜெயபால், கோபால் சொன்ன தகவலை கேள்விப்பட்டு கரூர் GH சென்று பார்த்தேன் அங்கு எனது கணவர் இறந்துவிட்டதாகவும், பிரேத பரிசோதனைக்காக சவக்கிடக்கில் வைத்துவிட்டு சம்பவம் குறித்து மாயனூர் காவல் நிலையம் வந்து புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். (**புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பப்படுகிறது**.) போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. ஜெயபாலும், கோபாலும் எங்கள் உறவினர்களா என்றால் ஜெயபால் உறவினர், கோபால் எனது ஊர்க்காரர். என்னிடம் காட்டப்படும் புகார்

வாக்குமூலம் மாயனூர் காவல் நிலையத்தில கொடுக்கப்பட்டுது. நான் 8 ம் வகுப்பு படித்துள்ளேன். இதிலுள்ள விவரங்கள் யார் எழுதினார்கள் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. காவல் நிலையத்தில் உள்ளவர்கள் எழுதினார்கள் யார் எழுதினார்கள் என்று தெரியாது. கையொப்பம் செய்த இடத்தில் தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

2. ஜெயபாலும், கோபாலும் எனக்கு எப்படி தகவல் சொன்னார்கள் என்றால் அலைபேசி மூலம் தகவல் சொன்னார்கள். புகாரில் சொன்னவாறு விபத்து நடைபெறவில்லை யென்றாலும் விபத்திற்கு எனது கணவர் தான் காரணம் என்றாலும் சரியல்ல. எனது கணவர் ஓட்டிச்சென்ற வாகனத்திற்கு காப்புறுதி மற்றும் எனது கணவருக்கு ஒட்டுநர் உரிமம் இல்லை என்றால் ஒட்டுநர் உரிமம் வைத்திருந்தார் ஆனால் காப்புறுதி இருந்ததா இல்லையா என்று எனக்குத் தெரியவில்லை.

3. அந்த வாகனம் எனது கணவருக்கு சொந்தமானது என்பதற்கு ஆவணம் இல்லையென்றால் சரியல்ல. எனது கணவர் இழப்பீடு பெறவேண்டி பொய்யாக புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
Date: 2025.08.22 10:09:26 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.